## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.36/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 (LW1) |
| Name : | **செல்லம்மாள்** |
| Father's/Husband Name: | |
| Village : | |
| Taluk : | **வேப்பந்தட்டை** |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி பிரபாகரன் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டை கவனித்து கொள்கிறேன். விபத்தில் இறந்தபோன ஆனந்தஜோதி எனது மகன் ஆவார். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான். எனது மகன் டிரைவராக வேலை செய்து வந்தார். 10.09.2022 அன்று எனது மகன் இருசக்கர வாகனத்தில் ஈரோட்டிலிருந்து ஊருக்கு வருவதற்காக பெரம்பலூரில் ஆத்தூர் –கிருஷ்ணாபுரம் சாலையில் கிருஷ்ணாபுரம் பாலம் அருகே அன்று அதிகாலை சுமார் 05.00 மணியளவில் அவருக்கு பின்னால் வந்த அதிவேகமாக வாகனம் கவனிக்காமல் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக பக்கத்து வீட்டுக்கார் ராஜேஷ் போன் மூலம் எனக்கு தகவல் வந்தது. தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்து எனது மகனுக்கு தலை மற்றும் உடல்பகுதியில் காயம் இருந்தது சம்பவ இடத்திலேயே எனது மகன் இறந்துவிட்டார். எனது மகன் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் உடைந்து இருந்தது. இறந்தபோன எனது மகன் உடலை பெரம்பலூர் அரசு மருத்துமனையில் வைத்துவிட்டு இதுதொடர்பாக புகார் அளித்தேன். புகார் (அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இறந்தபோன

எனது மகனின் உடல்மீது போலிசார் பிரேத விசாரணையை மேற்கொண்டார்கள்.பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தேன். நான் உடனிருந்து அடையாளம் காட்டினேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் உங்களுடைய மகன் கவனக்குறைவால் விபத்தில் சிக்கிகொண்டார் அதற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.36/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 (LW2) |
| Name : | ராஜேஷ் |
| Father's/Husband Name: | |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி பிரபாகரன் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தபோன ஆனந்தஜோதி, அ.சா.1 செல்லம்மாள் ஆகியோர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். இந்த வழக்கில் இறந்துபோன ஆனந்தஜோதி டிரைவராக வேலை செய்து வந்தார். 10.09.2022 அன்று நான் எனது மாமனார் ஊரான வெண்பாவூரிலிருந்து கறி எடுப்பதற்காக வெண்பாவூருக்கு வந்துவிட்டு மேலபுலியூர் செல்வதற்காக காலை 5 மணியளவில் கிருஷ்ணாபுரம் பாலம் அருகே கறி எடுத்துக்கொண்டிருந்தபோது அங்கு திடீரென சத்தம் கேட்டது நான் பார்த்த போது ஆனந்தஜோதி இருசக்கர வாகனத்தில் ஈரோட்டிலிருந்து ஊருக்கு வருவதற்காக வந்தவர் கார் மோதி விபத்து ஏற்பட்டது. முதலில் இருசக்கர வாகனம் வந்தது பின்னார் வந்த கார் பாலக்கட்டையில மோதி இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டது. காரின் கண்ணாடி உடைந்திருந்தது. ஆனந்தஜோதிக்கு தலை மற்றும் உடல்பகுதியில் காயம் இருந்தது சம்பவ இடத்திலேயே அவர் இறந்துவிட்டார். அவரை பார்த்ததும் அவர் எனது பக்கத்து

வீட்டுக்காரர் ஆனந்தஜோதி என்று தெரிந்து அவருடைய வீட்டிற்கு தொலைபேசியின் மூலம் தகவல் தெரிவித்தேன். இறந்தபோன ஆனந்தஜோதி உடலை பெரம்பலூர் அரசு மருத்துமனையில் வைத்துவிட்டு இதுதொடர்பாக புகார் அளித்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

(i) வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் இறந்தபோன நபரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு நீங்கள் சென்று பார்த்து போது அங்கு யாரும் இல்லை என்றால் சரிதான்.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.36/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 (LW3) |
| Name : | நித்தியானந்தம் |
| Father's/Husband Name: | |
| Village : | |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.11.2025

**சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது**

**( எதிரி பிரபாகரன் ஆஜர்)**

**முதல் விசாரணை**

(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தபோன ஆனந்தஜோதி என்னுடைய மாமா முறை ஆவார். அ.சா.1 செல்லம்மாள் எனக்கு அத்தை முறை ஆவார். இந்த வழக்கில் இறந்துபோன ஆனந்தஜோதி டிரைவராக வேலை செய்து வந்தார். 10.09.2022 அன்று காலை 5.30 மணியளவில் அ.சா.1 எனக்கு போன் செய்து கிருஷ்ணாபுரம் பாலம் அருகே ஆனந்தஜோதி இருசக்கர வாகனத்தில் ஈரோட்டிலிருந்து ஊருக்கு வருவதற்காக வந்தவரை கார் மோதி விபத்து ஏற்பட்டது என தெரிவித்தார். நான் உடனே அ.சா.1 வீட்டிற்கு சென்று அவரை அழைத்து கொண்டு பார்த்தபோது அங்கு ஆனந்தஜோதிக்கு தலை மற்றும் உடல்பகுதியில் காயம் இருந்தது சம்பவ இடத்திலேயே அவர் இறந்துவிட்டார். இறந்தபோன ஆனந்தஜோதி உடலை பெரம்பலூர் அரசு மருத்துமனையில் வைத்துவிட்டு இதுதொடர்பாக அ.சா.1 புகார் அளித்தார். பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(i) வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் இறந்தபோன நபரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு நீங்கள் சென்று பார்த்து போது அங்கு யாரும் இல்லை என்றால் சரிதான்.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate